COVID-19

# பீல் பிராந்தியத்தின் சுய-தனிமைப்படுத்தல் திட்டம்

Region of Peel
working with you

## சுய-தனிமைப்படுத்தலைச் செய்யவேண்டிய ஆனால் வீட்டில் அவ்வாறு செய்யமுடியாத பீல் மக்களுக்கானது



சுய-தனிமைப்படுத்தலைச் செய்வதற்கான வசதியற்றவர்களுக்கு ஆதரவளிப்பதற்காக தன்னார்வத் தனிமைப்படுத்தல் மற்றும் மீட்சித் திட்டங்களை பீல் பிராந்தியம் உருவாக்கியுள்ளது.

### சுய-தனிமைப்படுத்தலை நான் எப்போது செய்யவேண்டும்?

- COVID-19 பரிசோதனை முடிவு நேர்மறையாக இருக்கிறது.
- COVID-19 நோய்க்குறிகள் உள்ளன.
- COVID-19 அல்லது COVID-19 நோய்க்குறிகள் உள்ள ஒருவருடன் நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது.
- COVID-19ஆல் நீங்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்ற அறிவிப்பு ஒன்று COVID Alert app (எச்சரிக்கைப் பயன்பாடு) இலிருந்து கிடைத்திருக்கிறது.
- கடந்த 14 நாட்களுக்குள், கனடாவுக்கு வெளியேயான பயணத்திலிருந்து திரும்பிவந்திருக்கிறீர்கள்.
- பொதுச் சுகாதாரத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.



### இது என்ன? தனிப்பட்ட மற்றும் பாதுகாப்பான ஹோட்டல்-தரமுள்ள அறைகள். பின்வருவன உள்ளடங்கலாக அறை வசதிகள்:

- தனிப்பட்ட 3-piece குளியலறை (shower head உடனான குளியல் தொட்டியை உள்ளடக்குகிறது)
- மெத்திருக்கை (sofa) உடனான ஒரு queen கட்டில் மற்றும்/அல்லது இரண்டு twin கட்டில்கள்
- இலவசத் தொலைக்காட்சி
- WiFi இணைப்பு
- உதவிக்கான தொலைபேசி இணைப்பு மற்றும் நீட்டிப்பு (extension)
- தினமும் 3 வேளை உணவும் சிற்றுண்டிகளும் கிடைக்கும்
- வீட்டுக்கும் மற்றும் வீட்டிலிருந்தும் போக்குவரத்து வழங்கப்படுகிறது



### எவ்வாறு நான் பங்கேற்கலாம்?

**பீல் பிராந்திய மனித வளச் சேவைகளை (Peel Region Human Services) அழையுங்கள்:** 905-281-1269

மேலதிக தகவல்களுக்கு:
**peelregion.ca/coronavirus/self-isolation/#home**

### அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**ஆம்** குடும்பத்தவர்களுக்கு நாங்கள் இடமளிக்கலாம்

**ஆம்** COVID-19 பரிசோதனைகளை அந்த இடத்தில் செய்துகொள்ளமுடியும்

**இல்லை** OHIP சுகாதார அட்டைகளுக்கான தேவைப்பாடு

**இல்லை** கட்டணம் செலுத்துவதற்கான தேவைப்பாடு

CDS-0-886 20/01/13